**தலைப்பு 249 – திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் - 2024**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 249 – திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஆகஸ்ட் 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆரம்ப மதிப்பீடு, உள்ளபடியான வருமானத் துடன் ஒப்பீடு செய்த போது 11 வருமானக் குறியீடுகளுக்குரியதாக 06 சதவீதம் குறை வடைந்ததில் இருந்து 1,398 சதவீதம் அதிகரிப்பு வரை வீச்சில் வேறுபாடு காணப் பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | நிதிப் பிரமாணம் 85 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளைக் கவனத்திற் கொண்டு சரியாகவும் பொருத்தமாகவும் வருமான மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு 05 வருமானக் குறியீடுகளுக்கு (அரசாங்கத்தின் சொத்துக்களிலிருந்து கிடைக்கின்ற வருமானம் - ஏனைய வாடகை, விற்பனை மற்றும் கட்டணம் - நிருவாக ரீதியான கட்டணம் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | நிலுவை வருமானத்தை செயற்திறனாக அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் கொடுப்பனவுகள் - நானாவித, விற்பனை மற்றும் கட்டணம் - ஏனைய பெறுவனவுகள், வட்டி – கடன் வழங்குதல், கடன் மீள அறிவிடல்) உரிய நிலுவை வருமானம் ரூபா 2,376,435,947 ஆக இருந்ததுடன் இதில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட நிலுவை வருமானம் ரூபா 2,230,969,063 ஆகும். மேலும் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட நிலுவை வருமான மீதியில் ரூபா 2,226,572,432 அதாவது 99.8 சதவீத மீதி 03 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை வருமான மீதியாக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | | எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட நிலுவை வருமானத்துடன் ஒப்பிடும் போது 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் ஒட்டு மொத்த நிலுவை வருமானம் 100 சதவீதம் குறைவடைந்ததில் இருந்து 656 சதவீதம் வரை அதிகரிப்பு வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | நிலுவை வருமானத்தைக் குறைப்பதற்கு உரிய தாக செயற்திறனாக அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | வருமானக் குறியீட்டு இலக்கம் 2003.02.99 இன் கீழ் 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 540,981 நிலுவை வருமான மீதி 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 4,087,297 இனால் அதாவது 656 சதவீதத்தால் உயர்வடைந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | நிலுவை வருமானத்தை செயற்திறனாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | வருமானக் குறியீட்டு இலக்கம் 20.06.04.00 மூலதன வருமானம் - கடன் மீள அறவிடலின் கீழ் வ/ப பதுளை மாவட்ட சனச சங்கத்திற்குரிய ரூபா 11,114,479 நிலுவை வருமான மீதியும் மற்றும் வருமானக் குறியீட்டு இலக்கம் 20.02.02.01 வட்டி – கடன் வழங்குதலின் கீழ் இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனத்திற்கும் மற்றும் வ/ப பதுளை மாவட்ட சணச சங்கத்திற்குரிய முறையே ரூபா 612,893,552 மற்றும் ரூபா 2,814,035 மற்றும் சர்வோதய பொருளாதார முயற்சி அபிவிருத்தி சேவை (உத்தரவாத) லிமிட்டெட்டிற்கான ரூபா 296,351,801 ஆக கூட்டுமொத் தமாக ரூபா 912,059,388 நிலுவை வட்டி வருமானமும், 2018 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுவதுடன் இந்த வருமானத்தை அறவிடல் தொடர்பாக நிச்சயமற்ற நிலைமையொன்று காணப்படுகின்றமையும் மேலும் அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | மேற்படி |

### 3.2 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 18 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 02 மூலதனச் செலவின விடயங்களுக்கான மிகை நிதி ஏற்பாடு வழங்கப்பட்டதன் காரணமாக அந்த நிதி ஏற்பாடு ஆண்டில் பயன்படுத்தப்பட்ட பின்னர் ரூபா 63,850,948,140 சேமிப்பு காணப்பட்டதுடன் அந்த சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டில் 9 சதவீதம் முதல் 69 சதவீதத்திற்கு இடையிலான வீச்சிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடு சரியாகவும் பொருத்தமாகவும் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஆரம்ப செலவின மதிப்பீடு மற்றும் தேறிய நிதி ஏற்பாடை ஒப்பீடு செய்த போது 16 செலவின விடயங்களுக்குரிய முரண்கள் 100 சதவீதம் குறைவடைந்ததில் இருந்து 917 சதவீதம் அதிகரிப்பு வரையிலான வீச்சில் வேறுபாடு காணப்பட்டது. | முரண்பாடுகளுக்கு காரணம் பின்வருமாறு<br>• எதிர்பார்க்கப்பட்ட அளவினை விட 2024 ஆம் ஆண்டின் அமெரிக்க டொலர் ஒப்பீட்டு ரீதியில் இலங்கை ரூபாவின் பெறுமதியில் குறைவடைந்தமை.<br>• கவனத்திற் கொள்ளக் கூடிய வெளிநாட்டு கடன் அளவொன்று மீள் கட்டமைக்கப் பட்டதுடன் அதன் போது அந்தக் கடனின் கீழ் அது வரை காண்பிக்கப்ப டாதிருந்த கடன் வட்டியும் மீள் கட்டமைக்கப்பட்ட கடன் தொகையில் ஒரு பகுதிக்காக மாற்றப்பட்டிருந்தது. அவ்வாறு கடன் வட்டிக்காக கவனத்திற் கொள்ளப்பட்ட ஏற்பாடு போதியளவில் காணப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடு சரியாகவும் சாத்தியமானதாகவும் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | • சர்வதேச பிணை முறி கட்டமைப்பிற்காக நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் மேலதிய நிதி ஏற்பாடு வழங்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | |
| (இ) மீளாய்வாண்டின் போது இலக்கம் 249-1-2-0-1409-32 என்ற செலவின விடயத்திற்காக 2024 ஆகஸ்ட் 23 ஆந் திகதி அதிகார இலக்கம் 2024-2490000-BCUV-00000003 மற்றும் 2024 திசம்பர் 24 ஆம் திகதி அதிகார இலக்கம் 2024-2490000-BCUV-00000016 என்ற மாற்றல் பத்திரத்தின் மூலம் முறையே ரூபா 5,000,000,000 மற்றும் ரூபா 4,500,000,000 ஆக கூட்டு மொத்தமாக ரூபா 9,500,000,000 நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது. அவ்வாறே 2024 திசம்பர் 11 ஆந் திகதி குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 18,000,000,000 நிதி ஏற்பாடும் வழங்கப்பட்டிருந்தது. எனினும் நிதிக் கூற்றுக்களில் ACA 2(ii) - நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் செலவினக் கூற்றில் குறைநிரப்பு மதிப்பீட்டு நிதி ஏற்பாடாக ரூபா 9,500,000,000 மற்றும் நிதிப் பிரமாணம் 66/69 மாற்றல்களின் கீழ் ரூபா 18,000,000,000 ஆக பிழையாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த தாமத வழுக்கள் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு குறிப்பிடுவது டன் இது தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட முறை சரியான பிரகாரம் அறிக்கையிடுவதற்கு கவனத்தில் வேண்டும். |

## 3.3 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெளிநாட்டு மானியப் பெறுவனவுகளுக்குரிய 10 கணக்குகள், மூன்றாம் தரப்பினருக்கு மீண்டும் செலுத்துவதற்காக தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட 02 வைப்புக் கணக்குகள் மற்றும் உள்நாட்டு மானியப் பெறுவனவுக்குரிய வைப்பு | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | மானியங்கள், அவை பெறப்பட்ட நோக்கங் களுக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது அவ்வாறு முடியாதிருக்குமாயின் நிதிப் பிரமாணம் 570 இன் பிரகாரம் சந்தர்ப்ப சூழ்நிலை களுக்கு |

| | | |
|---|---|---|
| கணக்குகள் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 335 மில்லியன் ஆன 13 வைப்பு கணக்குகள் மீளாய்வாண்டில் கொடுக்கல் வாங்கல் எதுவும் மேற்கொள்ளப்படாமல் பேணிச்செல்லப்பட்டிருந்து. | | உரிய கணக்கிற்கு அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைத்தல் வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இலங்கை அரசாங்கத்திற்காக கடன் பெற்றுக்கொள்ளல் மற்றும் கடன் மீளச் செலுத்துதலை கணக்கீடு செய்தல், அரசாங்கத்திற்கு வெளிநாட்டு கடன் உதவி மற்றும் மானியமாகக் கிடைக்கின்ற நிதியினை முறையாகப் பகிர்ந்தளித்தல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வணிகக் கடன்களைப் பெற்றுக்கொள்வற்கு அரசாங்கத்திற்கு தேவையான வசதிகளை வழங்குதல், உப கடன் வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய நிதிய மூலங்களைப் பராமரித்தல் மற்றும் பொது முயற்சிகளுக்கு கடன் வழங்கும் போது தேவையான திறைசேரிப் பிணை மற்றும் சலுகைக் கடிதங்களை விநியோகித்தல் திறைசேரிகள் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட அடிப்படைப் பொறுப்புக்களாகும். எனினும் திணைக்களத்தால் அந்தப் பணிப்பொறுப்புக்கள் திறம்பட நிறைவேற்றப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன் | | |
| அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் தெளிவுபடுத்தல் குறிப்பு இலக்கம் 02 (Explanatory Notes) இன் கீழ் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன் பெறுமதி ரூபா 1,070 மில்லியன் ஆகக் காண்பிக்கப் பட்டிருந்த போதிலும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப் பட்ட தகவல்களின் படி அவற்றின் தேறியிருந்த (disbursements) காலத்தில் பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | ஒவ்வொரு கடன் தேறல்களும் இந்த திணைக்களத்தால் உரிய செயற்திட்டம் மற்றும் அமைச்சினால் அந்த தேறல்கள் சரியாக இருந்தமை உறுதிப்படுத்தியதன் பின்னரே கணக்கீடு செய்யப்படுகின்றது. எனினும் இந்த தேறல்களுக்குரிய செலவினங்கள் சரியாக இருந்தமைக்கு செயற்திட்ட அலுவலகம் மற்றும் உரிய அமைச்சினால் உறுதிப்படுத்தாமை யின் காரணமாக அதற்கு நேரொத்த கடன் தொகை கணக்கீடு செய்ய முடியாதிருந்தது. எனினும் உரிய கடன் தொகையினை கணக்கீடு செய்வதற்காக | அரசாங்கத்தின கடன் பெறுவனவுகளை கணக்கீடு செய்தலை முறைப்படுத்துதல் வேண்டும். |

| கடன் இலக்கம் | அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் தேறிய காலம் | திறைசேரி செயற் பாடுகள் திணைக் களத்தின் தகவல் களின் பிரகாரம் தேறிய காலம் |
|---|---|---|
| 2012017 | 2020 திசம்பர் | 2024 |
| 2012025 | 2023 நவம்பர் | 2024 |
| 2016035 | 2022 செப்டம்பர் | 2022 செப்டம்பர் 2023 மார்ச் மற்றும் செப்டம்பர் |

திணைக்களத்தால் 2020 முதல் 2023 ஆம் ஆண்டு வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மேலே காண்பிக்கப்பட்ட கடன் தேறல்கள் தேறியிருந்தமை காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் ஒரே கடன் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய ஒன்றுக்கொன்று வேறு பாடான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்தந்த பொறுப்புக்கள் கையளித்து திணைக்களத் தால் வெளிநாட்டுக் கடன் தேறுதல் தொடர்பாக முறையான மற்றும் நாளதுவரையான தகவல்கள் பேணிச்செல்லப் படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. மேலும் வெளிநாட்டுக் கடன் அறிக்கையிடுகின்ற முறைமையில் Stock and Flow Report No.1 அறிக்கையின் பிரகாரம் மேற்கூறப்பட்ட கடன் தொடர்பான முறையாகவும் நாளதுவரையானதுமான தகவல்கள் பேணிச்செல்லப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட கடன் கொடுக்கல் வாங்களுக்கு மேலதிகமாக முறையாக அறிக்கையிடப்படாத ஏனைய வெளிநாட்டுக் கடன் காணப்படுகின்ற ஆபத்தும் காணக்கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) கடந்த ஆண்டில் ஏற்பட்டிருந்த வெளிநாட்டு கடன் தேறல்கள் மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்ததாக கடன் முகாமைத்துவ முறைமையில் குறிப்பிட்டதன் காரணமாக அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் தேறியிருந்ததுடன் பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன,

| கடன் இலக்கம் | அரசாங்கத் தின் நிதிக் கூற்றுக்களி ன் பிரகாரம் | கடன் தகவல்கள் முறைமையி ன் பிரகாரம் தேறல்கள் | வேறுபாடுக ள் |
|---|---|---|---|
| 2012024 | USD 947,057 | USD 709,147 | USD 237,910 |
| 2019019 | USD 28,717,515 | USD 24,938,700 | USD 3,778,815 |
| 2019043 | SAR 47,320,932 | SAR 47,284,890 | SAR 36,042 |
| 2015021 | EUR 28,227 | இல்லை | EUR 28,227 |
| 2012025 | SAR 570,876 | SAR 272,171 | SAR 298,705 |

2023 ஆம் ஆண்டின் மேற்படி போது தேறியவைகள் 2024 ஆம் ஆண்டின் போது இந்த திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டது டன் அது 2024 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்தமை இந்த வேறுபாட்டிற்கு காரணமாக இருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (இ) | திணைக்களத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி வைப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 14.6 மில்லியன் ஆன வெளிநாட்டு மானியம் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தப்படாமல் மீளாய்வாண்டின் போது அரச வருமானத்தில் செலவுவைக்கப்பட்டிருந்தது. | வைப்புக் கணக்கிற்குரிய 2021.10.22 ஆந் திகதி கிடைக்கப் பெற்ற ரூபா 1,860,000 தொகை அந்த செயற்திட்டம் 2024 ஆம் ஆண்டு வரையில் அமுல்படுத்தாமையின் அடிப்படையில் உரிய அமைச்சில் இருந்து பல சந்தர்ப்பங்களின் போது விசாரணை செய்யப்பட்ட பின்னர் மற்றும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் அந்தத் தொகை அரசாங்கத்தின் வருமானத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.<br>மிகுதி 06 செயற் திட்டங்கள் அமுல் படுத்தியதன் பின்னர் ஒவ்வொரு செயற் திட்டத்தில் சேமிக்கப் பட்ட பணம் ரூபா 12,752,424 உடன்படிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தது. | மானியதாரர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்ற வகையில் கிடைக் கின்ற வெளிநாட்டு மானியங்கள் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்துதல் தொடர்பியும் ஒழுங்கு படுத்துதலையும் வலுப்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | 2024 சனவரி 01 ஆந் திகதி வரையில் இலங்கை அரசாங்கத்திற்கு மானியமாக கிடைக்கப் பெற்ற போதும் 2024 திசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தப்படாமல் செயல் இழந்து காணப்பட்ட வெளிநாட்டு மானியங்களின் பெறுமதி ரூபா 36.8 மில்லியன் ஆகும். | ஒரு வைப்புக் கணக்கிற் குரிய ரூபா 15,013,178 மற்றும் நிதி தொடர்பாக இந்தத் திணைக்களத் தால் உரிய திணைக்க ளத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டதுடன் அதற்காக 2025.04.10 ஆந் திகதிய கடிதம் மூலம் மேலும் நிதியினை நிறுத்தி வைக்குமாறு அந்தத் திணைக்களம் அறிவித் திருந்தது.<br><br>மேலும் வைப்பு கணக்கில் காணப்படுகின்ற ரூபா 782,916 தொகை 2025 ஆம் ஆண்டின் போது பயன்படுத்துவதற்காக | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | | உரிய அமைச்சினால் வரவுசெலவுத் திட்ட திணைக்களத்திலிருந்து நிதி ஏற்பாடு குறிப்பிடப் பட்டுள்ளது. அவ்வாறே 08 சேமிப்பு வைப்புக் கணக்குகளுக்குரியதாகக் காணப்படுகின்ற வைப்புப் பணம் உரிய விடயங்களுக்கு பயன்படுத்துமாறு இந்தத் திணைக்களத்தால் உரிய அமைச்சு/திணைக்களத் திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. | |
| (உ) | மீளாய்வாண்டிற்கு முன் மானியதாரர்கள் (Donors) 07 பேர்களிடமிருந்து 13 செயற்திட்டங்களுக்குரியதாக கிடைக்கப்பெற்ற கூட்டுமொத்தமான ரூபா 326.6 மில்லியன் ஆன மானியம் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தப்படாமல் மீளாய்வாண்டின் போது உரிய மானியதாரர்களுக்கு மீள அனுப்பப்பட்டிருந்தது. | உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தும் சில நிகழ்ச்சித்திட்டங்களுக்கு கிடைக்கப்பெற்ற மொத்தத் தொகையும் உரிய நிகழ்ச்சித்திட்டங் கள் அமுல்படுத்தாமை மற்றும் ஏனைய செயற் திட்டங்கள் / நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தி யதன் பின்னர் அந்த ஒவ்வொரு செயற்திட்டத்தில் சேமிக் கப்பட்ட தொகை மானிய தாரர்களின் கோரிக்கை, வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்தின் இணைக்கப்பாடு மற்றும் உரிய செயற்திட்டத்தை அமுல்படுத்துகின்ற நிறுவனத்தின் கோரிக்கை யின் அடிப்படையில் உடன்படிக்கையின் பிரகாரம் மானியப் பங்களிப்பு நிறுவனத்திற்கு மீள அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டி ருந்தது. | கிடைத்த வெளிநாட்டு மானியம் உச்ச அளவில் உரிய பணிகளுக்காக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஊ) | 2024 சனவரி 01 ஆம் திகதி வரையில் உள்நாட்டு மானியமாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 146.5 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய நோக்கங்களுக்கு | இந்த உள்நாட்டு மானிய வைப்புப் பணம் உரிய விடயங்களுக்கு பயன்படுத்துமாறு இந்த | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்படாதிருந் தமை அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தால் உரிய அமைச்சுக்கள் / திணைக்களங்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. | |
| (எ) | அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியதாகக் காணப்பட்ட உப கடன் (on lending) மீதி ரூபா 195,004 மில்லியன் ஆக இருந்தது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் உரிய நிறுவன உப கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளாமையின் காரணமாக 03 நிறுவனங்களுக்குரிய 05 வருடங்களை விஞ்சிய ரூபா 1,304 மில்லியன் நிலுவை உப கடன் தவணை மீதியொன்று அறவிட வேண்டி காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | அரசாங்கத்தின் உப கடன், உப கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு உப கடனுக்காக கிடைக்க வேண்டிய வட்டி பெறுமதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 10,733 மில்லியன் ஆக இருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் 03 நிறுவனங்களுக்குரிய 05 வருடங்களை விஞ்சிய செலுத்தப்படாத வட்டித் தொகையின் கூட்டு மொத்தம் ரூபா 912 மில்லியனாக இருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | அரசாங்கத்தின் உப கடன் வழங்குதல் மற்றும் உப கடன் சேவைகளுக்குரியதாக அறவிட வேண்டிய வட்டி தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | 2024 சனவரி 01 இல் உள்ளவாறு 04 நிறுவனங்களுக்குரிய உப கடன் உடன்படிக்கைகள் 07 இன் கீழ் காணப்பட்ட உப கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,282 மில்லியனில் மீளாய்வாண்டின் போது எந்தவொரு நிலுவைத் தொகையும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | உப கடன் அறவிடுவதற்கு முடியாதிருந்தமை தொடர்பாக விளக்கமளித்தல் பின்வருமாறு.<br><br>• பதுளை சணச நிறுவனத்தின் ரூபா 11,114,479 கடன் தொகை தவணையாக செலுத்துவதற்கு காணப் படுகின்ற இயலுமை விசாரணை செய்யப்பட் டுள்ளது.<br><br>• இலங்கை மத்திய வங்கியின் கீழ் அமுல்படுத்தப்பட்ட | உப கடன் வழங்குதல் மற்றும் உப கடன் சேவை உரிய பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மிகவும் பழைய கடன் உடன்படிக்கையாக இருந்ததுடன் நீண்ட காலம் முதல் இந்த மீதியில் செயற்பாடற்ற நிலையில் காணப்படுகின்றது. புதிய இலங்கை மத்திய வங்கி சட்டத்தின் கீழ் இந்த கடன் திட்டம் மத்திய வங்கியால் செயற்படுத்த முடியாதிருந்தமையால் இந்த மீதி இலங்கை மத்திய வங்கியால் திறைசேரிக்கு கையளிப்பதற்காக அறிக்கையொன்று வழங்குவதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

- மேலும் இலங்கை மத்திய வங்கிக்கு உரிய உப கடன் உடன்படிக்கை முடிவடைந்துள்ளதுடன் ரூபா 12,826,032 தொகை இலங்கை மத்திய வங்கியின் மூலம் கணக்குகளுக் கிடையே பரிமாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

- பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிய உப கடன் மீதி மன்னார் தீவில் எண்ணெய்ப் படிவு நடவடிக்கைகள் கிடைக்கின்ற தரவுகளில் விற்பனையில் பெறப்படுகின்ற தொகையின் மூலம் உரிய கடன் தொகையைத் தீர்ப்பதற்கு

| | | | |
|---|---|---|---|
| | | தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (ஒ) | 2024 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரும் காலாவதியாகியதன் அடிப்படையில் ரூபா 143,094 மில்லியன் மற்றும் கூட்டுமொத்மாக அ.டொலர் 2,678.29 பெறுமதியுடைய 25 திறைசேரி பிணைமுறிகள் மற்றும் ரூபா 32,550 மில்லியன் மற்றும் அ.டொலர் 210 பெறுமதியுடைய 15 சலுகைக் கடிதங்களுக்குரிய செல்லுபடிக் காலம் 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் மீண்டும் நீடிக்கப்பட்டிருந்தது. இதற்காக உரிய கடன் தொகை உரிய பிரகாரம் செலுத்துவதற்கு உரிய நிறுவனங்களுக்கு முடியாமை பிரதான காரணமாக இருந்தது. | 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் மீண்டும் நீடிக்கப்பட்ட சலுகைக் கடிதங்களின் எண்ணிக்கை 15 ஆகும். | எதிர்காலத்தில் திறைசேரி பிணை முறி மற்றும் சலுகைக் கடிதம் பெற்றுக்கொள்ளும் போது உரிய மேற்பார்வையின் கீழ் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | மீளாய்வாண்டின் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வெளி நிறுவனங்களுக்கு 11 சந்தர்ப்பங்களின் போது விநியோகிக்கப்பட்ட ரூபா 102,474.21 மில்லியன், அ.டொலர் 2,824.31 மில்லியன், மற்றும் யூரோ 12.29 மில்லியன பெறுமதியான பிணை முறிகள் மற்றும் 17 சந்தர்ப்பங்களின் போது விநியோகிக்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 33,430 மில்லியன் மற்றும் அ.டொலர் 210 பெறுமதியுடைய சலுகைக் கடிதம் என்பன 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் காலாவதியாகியிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் உரிய செல்லுபடிக் காலத்தை விஞ்சுவதற்கு முன் முறையான பிரகாரம் முடிவுறுத்துவதற்கோ அல்லது செல்லுபடிக் காலத்தை நீடிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய திறைசேரி பிணைமுறிகள் மற்றும் சலுகைக் கடிதங்களுக்குரிய செல்லுபடிக் காலம் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக தற்போதைய நிலைமை தெளிவுபடுத்தி அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | மேற்படி |
| (ஔ) | 2024 அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட திறைசேரி பிணை முறி மற்றும் சலுகைக் கடிதங்களுக்காக திணைக்களத்தில் 7 சந்தர்ப்பங்களுக்குரிய கடன் தவணையாக ரூபா 92 மில்லியன் மற்றும் கடன் வட்டியாக ரூபா 1,741 மில்லியன் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 1,832 மில்லியன் உரிய நிறுவனத்திற்கு 2020 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | மேற்படி |

| | | |
|---|---|---|
| (க) | ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலை நிர்மாணம் மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக அந்தப் பல்கலைக்கழகத் தால் தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன் தொகையில் 2024 மார்ச் மாதத்திற்குரிய நிலுவையாகக் காணப்பட்ட கடன் தவணைப் பணம் மற்றும் வட்டியை தீர்ப்பதற்காக ரூபா 2,200 மில்லியன் தொகையும், வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் விமான கம்பனியால் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டியதாக காணப்பட்ட நிலுவைக் கடன் மற்றும் வட்டி செலுத்துவதற்காக அ.டொலர் 8 மில்லியனுக்கு சமமான ரூபா 2,400 மில்லியனும் திணைக்களத்தால் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது திறைசேரி பிணைகள் மற்றும் சலுகைக் கடிதம் விநியோகித்ததன் காரணமக கூட்டு மொத்தமாக ரூபா 4,600 மில்லியன் தொகையான நிலுவைக் கடன் மற்றும் வட்டி மீதி தீர்த்துவைப்பதற்காக பொதுத் திறைசேரிக்கு செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனியால் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் மற்றும் கடன் வட்டிக்காக ரூபா 2,400 மில்லியன் செலுத்தப்பட்டதுடன் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தால் தேசிய சேமிப்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் மற்றும் கடன் வட்டிக்காக ரூபா 2,200 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. | மேற்படி |

## 4.2 உள்நாட்டுக் கடன் மீள்கட்டமைத்தல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 சனவரி 01 ஆம் உள்ளவாறு அமெரிக்க டொலர் 240 மில்லியன் அதாவது ரூபா 77,742 மில்லியன் ஆன இலங்கை வங்கியிலிருந்து பெறப்பட்ட அந்நியச் செலாவணித் தொகை வங்கி அலகு (செயற்திட்டம் அல்லாத) கடன் தொகையின் நிலுவை வட்டி ரூபா 6,601 மில்லியனுடன் இலங்கை ரூபாக்களை உடைய திறைசேரி பிணைமுறிகளுக்கு மாற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு அந்த கடன் மீள் கட்டமைக்கப்பட்ட பின்னர் இலங்கை வங்கிக்கு செலுத்த வேண்டிய திறைசேரி பிணை முறிகளின் பெறுமதி ரூபா 82,551 மில்லியனாக காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | தகவல்கள் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) | பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் திறைசேரி பிணை முறியின் அடிப்படையில் அரச வணிக வங்கிகள் இரண்டிலிருந்து பெற்ற பின்னர் 2022 ஆம் ஆண்டின் போது பொதுத்திறைசேரிக்கு கையளிக்கப்பட்ட கடன் தொகைகளுக்குரிய 2024 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட அமெரிக்க டொலர் 2,435 மில்லியன் அதாவது ரூபா 788,682 மில்லியன் மீதி பின்வரும் பிரகாரம் மீள் கட்டமைக்கப்பட்டிருந்தது.<br><br>• இலங்கை வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் பெறுமதியான ரூபா 410,430 மில்லியன் மற்றும் அதற்குரிய நிலுவை வட்டி ரூபா 73,603 மில்லியனையும் உள்ளடக்கி அமெரிக்க டொலர்களில் உடைய கால ரீதியான கடன் வசதிகளாக மாற்றப்பட்டிருந்தது.<br><br>• மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையில் ரூபா 136,698 மில்லியன் மற்றும் அதற்குரிய நிலுவை வட்டி ரூபா 30,464 மில்லியனையும் உள்ளடக்கி அமெரிக்க டொலர்களை உடைய காலரீதியான கடன் வசதிகளாக மாற்றப்பட்டு மிகுதி ரூபா 224,358 மில்லியன் மற்றும் அதற்குரிய நிலுவை வட்டியான ரூபா 38,225 மில்லியனை உள்ளடக்கி இலங்கை ரூபாக்களை உடைய திறைசேரி பிணை முறிகளாக மாற்றப்பட்டிருந்தது.<br><br>• அந்த கடன் மீள்கட்டமைக்கப்பட்ட பின்னர் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை வங்கிக்கு செலுத்த வேண்டிய கால ரீதியான கடன்களின் பெறுமதி அமெரிக்க டொலர் 1,582 மில்லியன் அதாவது ரூபா 462,783 மில்லியனும், மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய காலரீதியான கடன் பெறுமதி அமெரிக்க டொலர் 546 மில்லியன் அதாவது ரூபா 159,823 மில்லியனும் மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய திறைசேரி பிணை முறி பெறுமதி ரூபா 262,583 மில்லியனும் ஆகக் காணப்பட்டது. | கணக்காய்வு மேற்படி அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் சிரேஷ்ட நிலையில் மேலதிக பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளரில் 07 பதவிகளும், இரண்டாம் நிலையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் 14 பதவிகளையும் உள்ளடக்கி மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 28 ஆகக் காணப்பட்டது. மேலும் இரண்டாம் நிலையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் ஒரு பதவி மிகையாகக் காணப்பட்டது. பதவியணியினரை மீளாய்வு செய்து காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது தேவையான பதவிகளை நீக்குவதற்கோ மீளாய்வாண்டில் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பாக வெற்றிடமான பதவிகளுக்குரிய நியமன அதிகாரத் தரப்பினருக்கு நிதி அமைச்சின் செயலாளர் மூலம் எழுத்து மூலம் கோரப்பட்ட போதும் அரச கொள்கையாக ஆட்சேர்த்தல் வரையறுக்கப்பட்டமை மற்றும் அரச நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 4/2022 மற்றும் அதற்கு இணையான சுற்றறிக்கைகள் அது தொடர்பான சுற்றறிக்கைகளின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் உள்நாட்டு / வெளிநாட்டு சம்பளமற்ற விடுமுறை பெற்றுச் சென்றமையினால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது. | திணைக்களத்தின் பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு அத்தியவசியமான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கும், அத்தியவசயமற்ற பதவிகளாயின் அவற்றை திருத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |